# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2018

## வகுப்பு 12

பதிவு எண் | | | | | | |

நேரம்: 2.30 மணி **PART - III - வணிகவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:
1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும். படங்களை வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பிரிவு - I

**20×1=20**

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) தனிவணிகரின் பயன் என்ன?
அ) குறைவான முதல் ஆ) விரைவான முடிவு
இ) வரையறு முதல் ஈ) வரையறுக்கப்பட்ட மேலாண்மை திறன்

2) பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு
அ) தனிவணிகம் ஆ) கூட்டாண்மை
இ) கூட்டுப்பங்கு நிறுமம் ஈ) இந்து கூட்டுக்குடும்ப வணிகம்

3) வணிகத்தின் மிக முக்கியமான நோக்கம் எது?
அ) வேலைவாய்ப்பு உருவாதல் ஆ) சரக்கு மற்றும் சேவை அளித்தல்
இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பொருளாதாரத்தை உயர்த்துதல்

4) பிறப்பின் மூலம் உருப்புமை ஏற்படுத்துவது
அ) தனிவணிகம் ஆ) இந்து கூட்டுக்குடும்பம் இ) கூட்டுறவு ஈ) கூட்டாண்மை

5) தனிவணிகம் துவங்க
அ) இரண்டு நபர் மட்டும் ஆ) ஏழு நபர் மட்டும்
இ) ஒரு நபர் மட்டும் ஈ) மூன்று நபர் மட்டும்

6) தனியாள் வணிகத்தில் ............ முடிவெடுக்க முடியும்.
அ) விரைவாக ஆ) தாமதமாக
இ) விரைவாகவும் தாமதமாகவும் ஈ) அவற்றில் ஏதுமில்லை

7) தனியாள் வணிகத்தில்
அ) வியாபார ரகசியங்களை காக்க முடியாது ஆ) வியாபார ரகசியங்களை காக்க முடியும்
இ) மேற்கண்டவற்றில் ஏதுமில்லை

8) ஒரு கூட்டுப்பங்கு நிறுமம் தனது மூலதனத்தை எந்த வழியில் அதிகப்படுத்திக் கொள்ளலாம்?
அ) பங்குகள் விற்பனை ஆ) வெளி நாடுகளில் கடன் வாங்குதல்
இ) காப்பீட்டு நிறுவனத்தில் கடன் வாங்குதல் ஈ) ஆர்.பி.ஐ. இடம் கடன் வாங்குதல்

9) இங்கிலாந்தில் கூட்டாண்மை சட்டம் பதிவு செய்தல்
அ) 1907 ஆ) 1949 இ) 1932 ஈ) 1956

10) கூட்டாளிகளின் பொறுப்பு
அ) கூட்டு மற்றும் தனி பொறுப்பு ஆ) வரையறுக்கப்பட்டது
இ) வரையறா பொறுப்பு ஈ) இவற்றில் ஏதுமில்லை

11) இந்தியாவில் கூட்டாண்மைப் பதிவு
அ) கட்டாயம் ஆ) கட்டாயமில்லை இ) விருப்பப்பதிவு ஈ) இவற்றில் ஏதுமில்லை

12) கூட்டாண்மை உருவாக்கப்படுவது
அ) அன்பு மற்றும் பாசம் ஆ) உறவுகள் மூலம்
இ) ஒப்பந்தம் ஈ) இவற்றில் ஏதுமில்லை

13) பொதுநிறுமத்தில் குறைந்தபட்ச நபர்களின் எண்ணிக்கை
அ) 2 ஆ) 3 இ) 7 ஈ) 10

14) அட்டவணை A என்பது நிறுமச்சட்டத்தின் படி
அ) நிகழ்ச்சி குறிப்பு மாதிரி ஆ) இருப்புநிலைக் குறிப்பு மாதிரி
இ) செயல்முறை விதிகளின் மாதிரி ஈ) அமைப்பு முறையேட்டின் மாதிரி

15) கூட்டுப்பங்கு நிறுமம் உருவாக்கப்பட்டது
அ) சட்டம் ஆ) அரசாங்கம் இ) தொழில் முனைவோர் ஈ) பணம் இருப்பவர்கள்

16) கடனீட்டுப் பங்குதாரர் என்பவர்
அ) கடனாளர் ஆ) உறுப்பினர் இ) கடன் வாடிக்கையாளர் ஈ) உரிமையாளர்

17) தகுதி பங்கின் இயல்மதிப்பு ............ ரூபாய் மிகக்கூடாது.
அ) 5000 ஆ) 50000 இ) 500000 ஈ) 500

18) பொதுநிறுமத்தில் ஒட்டுமொத்த மேலாளர்களின் ஊதியம்
அ) நிகர லாபத்தில் 11% ஆ) செலுத்தப்பட்ட முதலில் 11%
இ) நிகர லாபத்தில் 5% ஈ) செலுத்தப்பட்ட முதலில் 5%

19) ஒரு இயக்குநர் எத்தனை பொதுநிறுமத்தில் இயக்குநர் பதவி வகிக்கலாம்?
அ) 10 ஆ) 15 இ) 20 ஈ) 5

20) ஒரு கூட்டுப்பங்கு நிறுமத்தில் இயக்குநர் வகிக்கும் நிலை ...............
அ) தணிக்கையாளர் ஆ) நிர்வாக இயக்குநர்
இ) நிதியாளர் ஈ) பொறுப்பாண்மையர், முகவர் மற்றும் அதிகாரி

**பிரிவு - II** **7×2=14**

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 21க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

21) ஒருங்கிணைத்தலின் பொருள் என்ன?
22) பன்னாட்டு நிறுமங்களுக்கு 4 உதாரணம் கொடு.
23) தனியாள் வணிகம் வரையறு.
24) வரையறா பொறுப்பு என்றால் என்ன?
25) உழையா கூட்டாளி என்பவர் யார்?
26) ஒரு கூட்டாண்மையின் உட்கிடை ஆணையுரிமைக்கு வரைவிலக்கணம் தருக.
27) பங்கு முனைமம் என்றால் என்ன?
28) குவிவு முன்னுரிமைப் பங்குகள் என்றால் என்ன?
29) பகராள் என்றால் என்ன?
30) மாற்று இயக்குநர் என்பவர் யார்?

**பிரிவு - III** **7×3=21**

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 31-ற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

31) ஆண்டு பொதுக்கூட்டம் குறித்து குறிப்பு வரைக.
32) வாரிய அமைப்பின் பொருள் பற்றி கூறுக. உதாரணம் கொடு.
33) கூட்டுறவு அமைப்பு பற்றி நீ அறிவது என்ன?
34) கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளை கூறு.
35) கூட்டாண்மை கலைப்பிற்கும், நிறுவன கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் 3 எழுதுக.
36) கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு என்றால் என்ன?
37) அரசு நிறுமம் என்றால் என்ன?
38) பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன?
39) இயக்குநரின் தகுதியின்மைகள் யாவை?
40) குறிப்பு வரைக: (அ) பகராள் (ஆ) குறைவெண்

**பிரிவு - IV** **7×5=35**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:**

41) இந்து கூட்டுக்குடும்பம் பற்றி விவரித்து எழுதுக. **(அல்லது)**
அமைப்பின் கோட்பாடுகளை விவரி. ஏதேனும் 5.

42) சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை விவரி. **(அல்லது)**
தனியாள் வணிகத்தின் நன்மைகள் ஏதேனும் 5 விவரி.

43) கூட்டாளிகளின் வகைகளை விவரி. **(அல்லது)**
கூட்டாளிகளின் உரிமைகள் மற்றும் கடமைகளை விவரி.

44) கூட்டாண்மைக்கும் கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகளை கூறு. **(அல்லது)**
பங்குகட்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறுக.

45) நிறும அமைப்பு முறையின் சிறப்பியல்புகளை விவரிக்கவும். **(அல்லது)**
தகவல் அறிக்கை என்றால் என்ன? அதன் பொருளடக்கங்களை தருக.

46) இயக்குநர்களின் பணிகள் மற்றும் கடமைகளை விவரி. **(அல்லது)**
ஒரு நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் யாது?

47) சட்டமுறை கூட்டம் என்றால் என்ன? இதில் காணப்பெற வேண்டிய முக்கிய செய்திகளை சுருக்கமாக கூறுக. **(அல்லது)**
பல்வகை நிறுமங்களை சுருக்கமாக விளக்குக.

***@@@***